1993 ஏப்ரல் 28]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமங்களும் எந்தக் குடிநீர் ஆதாரமும் இல்லாமல், தற்போது மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. இவை வைப்பாற்றிலிருந்து ஒரு கிலோமீட்டர் அருகில் இருந்தும், அங்கே ஏற்கெனவே போடப்பட்ட போர் வெல்களிலிருந்தும் பயன் பெற முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. அங்கேயிருந்து ஏழாயிரம் பண்ணைக்கு 20 கிலோமீட்டர் பைப்லைன் அமைத்து, எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே இதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டே இதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று முதலிலே சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், வினா எண் 513, திரு. எஸ். எஸ். ராம சுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

513—

பெத்த நாடார் பட்டி ஊராட்சி 10-வது வார்டு அருந்ததியருக்கு காலனிக் வீடுகள்.

*10405— திரு. எஸ். எஸ். ராம சுப்பு :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள பெத்த நாடார் பட்டி ஊராட்சி 10-வது வார்டு அருந்ததியர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே :

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் கீழப் பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெத்த நாடார் பட்டி ஊராட்சியில் 10-வது வார்டு அருந்ததியர் மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு மேற்படி மனு தாரரிடம் இலவச பட்டாவோ, அல்லது கிரயப் பட்டாவோ இல்லை, அவர்கள் பட்டா பெற்று அணுகினால் வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். ராம சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும் போது, பட்டா இல்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே அவர்கள் பட்டாவைக் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால், இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டா இருந்தால் வீடு கட்டிக் கொடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. எஸ். எஸ். ராம சுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்வதில் முந்தைய ஆண்டுகளைவிட இப்போது குறைவான வீடுகள்தான் ஒதுக்கப்பட்டிருக் கின்றன. பல்வேறு ஒன்றியங்களில் நாங்கள் கேட்கும் போது ஒன்றியத்தினுடைய ஆணையாளர்கள் சொல்லும் போது முந்தைய ஆண்டுகளை விட இப்போது குறைவாக ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது, ஆதலால் பல்வேறு அருந்ததியர் களுக்கு மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டும் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு வசதி இல்லாது இருப்பதால், நீங்கள் அரசிடம் முறையிட வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். எனவே இதைக் கூடுதலாக அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி தனியாகக் கேள்வி போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 514, டாக்டர் வெ. சரோஜா—மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.